21.12.2023

அ.வ.எண் 2/2019

பேபி ஸ்டெல்லா (D.W.1)

3,5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. வாதி எனக்கு என்ன உறவு என்றால் தம்பி ஆகும். வழக்கு சொத்து எனது அப்பாவுக்கு உரிமைப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா 2009 ஆம் வருடம் காலஞ்சென்ற பிறகு வழக்கு சொத்தில் எங்கள் அனைவருக்கும் சமஉரிமை உண்டு என்றால் சரிதான். 1-ஆம் பிரதிவாதிக்கு தற்போது எவ்வளவு வயது இருக்கும் என்றால் 70 வயதிற்குள் இருக்கும். வழக்கு போடுவதற்கு முன்பு 1-ஆம் பிரதிவாதிக்கு ஞாபக சக்தி உண்டா என்றால் அவ்வளவாக கிடையாது. 1-ஆம் பிரதிவாதிக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியாது. கைரேகை தான் வைப்பார். வழக்கு சொத்தை எல்லோரும் தான் அனுபவம் செய்து வருகிறோமா என்றால் எல்லோரும் தான் அனுபவம் செய்து வருகிறோம்.